ORIGINAL ARTICLE

# இடைநிலைப்பள்ளிகளில் மாணவர்களின் சுய சால்புடைமைக் கூறுகளை வலுப்படுத்தும் அகல்விளக்கு நாவல்

# [IṬAINILAIPPAḶḶIKAḶIL MĀṆAVARKAḶIṈ CUYA CĀLPUṬAIMAIK KŪṞUKAḶAI VALUPPAṬUTTUM AKALVIḶAKKU NĀVAL]

# AGAL VILAKKU NOVEL TO STRENGTHEN SECONDARY SCHOOL STUDENT'S SELF-ESTEEM ELEMENTS

**கி. இளம்பூரணன் கிராமணி / Ilampuranan Kiramany *[1]**
**சி. குமார் / S. Kumar [2]**

[1] Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia. Email: ilampuranankiramany@gmail.com
[2] Valivalam Desikar Higher Seccondary School, Thirukuvalai (TK), Nagapattinam, Tamil Nadu, India. Email: kumarvalivalam3@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/142

**Abstract**

Teaching Tamil literature in secondary schools ensures that students' knowledge of literature is nurtured and appreciated. And the goal is to produce individuals who are intelectually, spiritually, emotionally and physically balanced and harmonic. The study was conducted to find out how M. Varatharasan's novel 'Agalvilakku' novel contributes to the development of Self-Esteem Elements among secondary schools students. This study was conducted in qualitative and quantitative approach. Document analysis and fieldwork in particular are the primary approaches to this study. The study concludes that the 'Agalvilakku' novel plays a major role in the development of self - possessive elements such as leadership, virtue, self - confidence, self - esteem, energy, creativity, and personal, social interaction among secondary school students. M. Varadarajan's 'Agalvilakku' novel is suitable for teaching literature to secondary school students.

**Keywords :** Agalvilakku Novel, Strengthen Self-Esteem Elements

**ஆய்வுச் சாரம்**

இடைநிலைப் பள்ளிகளில் தமிழ் இலக்கியம் கற்றல்கற்பித்தல் என்பது மாணவர்களின் இலக்கிய அறிவை வளர்ப்பதோடு, அதனை உய்த்துணர்ந்து போற்றுவதையும் உறுதி செய்கிறது. மேலும் அதன்வழிப் பெறப்படும் படிப்பினையைத் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்துச் சமன்நிலை மாந்தனை உருவாக்குவதையே குறியிலக்காகக் கொண்டிருக்கின்றது. இந்த நோக்கத்தை அடைவதற்கு தரமான இலக்கிய நூல்கள் கற்பிக்கப்படவேண்டும். அவ்வகையில் இடைநிலைப்பள்ளிகளில் தமிழ் இலக்கியப் பாடம் எடுக்கும் மாணவர்களின் சுய சால்புடைமை வளர்ச்சிக்கு மு.வரதராசனின் அகல்விளக்கு நாவல் எவ்வாறு பங்காற்றுகிறது என்பதை ஆய்ந்தறியவே இவ்வாய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வு இலக்கிய சமூகவியல் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டது. மேலும், இந்த ஆய்வு தரசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக ஆவண பகுப்பாய்வும் களப் பணியும் இவ்வாய்வின் முதன்மை அணுமுறைகளாகும். ஆய்வின் முடிவாக, சுய சால்புடைமைக் கூறுகளான தலைமைத்துவம், நற்பண்பு, தன்னம்பிக்கை, தன்மதிப்பு, ஆற்றல், ஆக்கமுடைமை மற்றும் தனிநபர், சமுதாயத் தொடர்பு ஆகியவற்றை இடைநிலைப்பள்ளி மாணவர்களிடையே வளர்ப்பதில் அகல்விளக்கு நாவல் பெரும் பங்காற்றுகிறது என்பது உறுதியாகின்றது. இதன்வழி, மு. வரதராசனின் அகல்விளக்கு நாவல் இடைநிலைப்பள்ளி மாணவர்களின் இலக்கியப் பாட கற்றல்கற்பித்தலுக்கு உகந்ததாக அமைந்திருக்கின்றது.

**கருச்சொற்கள்:** அகல்விளக்கு நாவல், சுய சால்புடைமை, இடைநிலைப்பள்ளி மாணவர்கள்

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 20th April 2021, revised 15th May 2021, accepted 30th May 2021

## முன்னுரை

இடைநிலைப்பள்ளிகளுக்கான இலக்கியக் கல்வி மாணவர்கள் இலக்கியக் கூறுகளை அறிந்து கொள்வதையும் இலக்கியத்தை உய்த்துணர்வதையும் அதனைப் போற்றுவதையும் அதன்வழிப் பெறப்படும் படிப்பினையையும் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்துச் சிறந்த மாந்தராக விளங்குவதையும் குறியிலக்காகக் கொண்டுள்ளது. (கே.எஸ்.எஸ்.எம் இலக்கியப் பாட தர அடைவு ஆவணம், 2018)[1] மலேசிய தேசியக் கல்விக் கொள்கையை நிறைவு செய்யும் வண்ணமே மேற்கண்ட குறியிலக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியத்தின் கற்றல்கற்பித்தலின்வழி இடைநிலைப்பள்ளி மாணவர்கள் இலக்கிய வகைகளையும் கூறுகளையும் அறிந்து கொள்வதோடு இலக்கியப் படைப்பாளர்களையும் அறிந்து கொள்ள வகை செய்கிறது. மேலும் நாவல், நாடகம் மற்றும் கவிதைகளை வாசித்துப் புரிந்து கொள்வதோடு படைப்புகளின் முருகுணர்ச்சியையும் உய்த்துணர்வர். படைப்புகளைத் திறனாய்வு செய்தும் இலக்கியப் படைப்புகளில் உள்ள உயரிய பண்புகளையும் போற்றுவர். இவை இடைநிலைப்பள்ளி மாணவர்களிடையே ஆய்வு, ஆக்கச் சிந்தனைகள் வளரத் துணைப்புரிகின்றது. மேலும் புத்தாக்கச் சிந்தனையுள்ள சமன்நிலை மாந்தர் உருவாக்கத்தை உறுதிச் செய்கிறது. (கே.எஸ்.எஸ்.எம் இலக்கியப் பாட தர அடைவு ஆவணம், 2018)[1].

நாவல், நாடகம் மற்றும் கவிதைகளில் காணப்படும் விளைபயன் மிக்க பல்வேறு இலக்கியக் கூறுகள் மாணவர்களிடையே இலக்கியம் என்பது அவர்களின் வாழ்க்கையின் பதிவுகள்தான் எனும் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. நற்கருப்பஞ்சாற்றினிலே தேன் கலந்து

பால் கலந்து செழுங்கனி தீஞ்சுவை கலந்து, ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதை போன்று இன்பத்தை

நுகர்ந்து வாழ்க்கையையே பண்படுத்தி மக்கட் பண்பை வளர்க்கும் தன்மையைக் கொண்டது இலக்கியக் கல்வி எனக் கூறுகின்றார் முனைவர் ந. சுப்புரெட்டியார் (2000)[2]. மேலும் இலக்கியம் கற்போரின் கற்பனையை வளப்படுத்தி, அவர்களிடம் தனிவீறு (individuality) பண்பை வளர்த்து ஒழுக்கத்தையும் சுய சால்புடைமையும் சீர்ப்படுத்துகின்றன.

இலக்கியக் கல்வி இடைநிலைப்பள்ளி மாணவர்களிடையே சுய சால்புடைமை வளர்ச்சியை வலுப்படுத்தும் என்பதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வேடு படைக்கப்படுகிறது. இலக்கியக் கற்றல் கற்பித்தலின்வழி தலைமைத்துவப் பண்பையும் நற்பண்புகளையும் மாணவர்களிடையே வளர்க்க முடியும். மேலும் தன்னம்பிக்கையும் தன்மதிப்பையும் உணர்ந்து மாணவர்கள் கடமையாற்ற இவ்விலக்கியக் கல்வி உதவுகிறது. தன்னாற்றலையும் ஆக்கமுடைமையையும் வெளிக்கொணர்ந்து மாணவர்களின் தனிமனித மேம்பாட்டிற்கு வித்திடுகிறது. தனிநபருடனும் சமுதாயத்துடனான நல்லுறவை மேம்படுத்தவும் வகைச் செய்கிறது இலக்கியக் கல்வி. (கே.எஸ்.எஸ்.எம் இலக்கியப் பாட தர அடைவு ஆவணம், 2018)[1]

**முந்தைய ஆய்வு**

இடைநிலைப்பள்ளிகளில் கற்றுக் கொடுக்கப்படுகின்ற இலக்கியப் பாடம் தொடர்பாகப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாய்வுகளில் பல நாவல் கற்றல்கற்பித்தலின்வழி மாணவர்களிடையே விதைக்கப்படுகின்ற நன்னெறி கூறுகள் தொடர்பானதாக அமைந்திருகின்றன. மாணவர்களின் கற்றலுக்கு ஏற்ற பனுவலின் ஏற்புடைமையை மதிப்பிடும் நோக்கத்தையே இவ்வாய்வுகள் முதன்மையாகக் கொண்டிருக்கின்றன.

அவ்வகையில் 2020ஆம் ஆண்டில் Husairi Hussin, Nor hasimah Ismail மற்றும் Mohd Isha Awang[3], பரந்த மனப்பான்மை கொண்ட ஒற்றுமைப் பண்பை வளர்ப்பதில் மலாய் மொழிப் பாட நாவல் என்ற தலைப்பிலான ஆய்வை மேற்கொண்டுள்ளார்கள். இந்த ஆய்வு Jendela Menghadap Jalan என்ற நான்காம் படிவ மாணவர்களுக்கான மலாய்மொழி நாவலை உட்படுத்தியதாக அமைதுள்ளது. இந்நாவலின் ஆய்வு மாணவர்களிடையே திறந்த மனப்பான்மையும் ஒற்றுமை உணர்வையும் விதைக்கின்ற கூறுகளை கண்டறிவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. George Lukacs அவர்களின் சமூக பிரதிபலிப்புக் கோட்பாடு (Teori Cerminan Lukacs) இவ்வாய்வை மேற்கொள்வதற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. ஆய்வின் முடிவாக, இந்நாவல், மலேசியக் கல்வி அமைச்சு பாடத்திட்டத்தில் வறையறுத்துள்ள ஒற்றுமைக்கான பண்புகளையும் திறந்த மனப்பான்மையை வளர்க்கும் கூறுகளையும் மாணவர்களிடையே விதைக்கின்றது என்பது உறுதி செய்கிறது.

மேலும், Chew Fong Peng (2010)[4] என்பவர் மலேசியக் கல்வி திட்டத்தில் இலக்கியப் பாடத்தின்வழி நன்நெறி பண்புகளை வளர்த்தல் என்ற தலைப்பில் மலாய்மொழி இலக்கியப் பாடம் தொடர்பான ஆய்வை மேற்கொண்டுள்ளார். “Anak Laut” படிவம் 4, அதாவது “Serunai Malam” Usman Awang என்பவரின் நாடகம்; “Titik-titik Perjuangan” Kala Dewata என்பவரின் நாடகம்; மற்றும் “Seri Nara” Shaharom Husain என்பவரின் நாடகம் இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. ஒரே பொருளாதாரப் பின்னணியைக் கொண்ட 60 படிவம் ஐந்து

அறிவியல் பிரிவு மாணவர்களைக் கொண்டு இக்கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாடகத்தின்வழி மாணவர்களிடையே நாட்டுப்பற்று மற்றும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வளர்க்கும் கூறுகளை ஆராய்வதே இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாகும். ஆய்வின் முடிவில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையையும் நாட்டுப் பற்றையும் வளர்ப்பதில் மேற்கண்ட நாடகங்கள் வெற்றி கண்டுள்ளன என்பது உறுதியாகிறது.

மேலும் Nurul Raihana Abdullah & Norila Md Salleh[5] என்பவர்கள் 2016ஆம் ஆண்டு Songket Berbenang Emas நாவலின் முதன்மைப் பாத்திரத்தின்வழி நற்பண்புகள் என்ற ஆய்வை மேற்கொண்டனர். இந்த ஆய்வு Songket Berbenang Emas என்ற மலாய் நாவலை உட்படுத்தியது. நாவலில் வெளிப்படுகின்ற கே.பி.எஸ்.எம் பாடத்திட்டத்தில் உள்ள 16 நன்நெறிப் பண்புகளைக் கண்டறிதலையே இவ்வாய்வு முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. Thomas Lickona என்பவரின் ஆளுமை உருவாக்க கல்வி (Model Pendekatan Pendidikan Karakter) அணுகுமுறை இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவான, Songket Berbenang Emas நாவல் மாணவர்களிடையே பாடத்திட்டத்தில் உள்ள 16 நன்நெறிப் பண்புகளை வளர்ப்பதில் பங்காற்றியுள்ளது.

## ஆய்வுச் சிக்கல்

2016ஆம் தொடங்கி மலேசியத் தேர்வு வாரியம் இலக்கியப் பாடத்திற்குப் புதிய நூல்களை அறிமுகப்படுத்தியது. அவை முறையே மலேசியா மற்றும் தமிழ்நாட்டுக் கவிஞர்களின் 12 கவிதைகள், 'கவிச்சக்கரவர்த்தி' நாடகம் மேலும் 'அகல்விளக்கு' நாவல் ஆகும். கல்வி அமைச்சு வரையறுத்த கே.பி.எஸ்.எம் என்ற இடைநிலைப்பள்ளியின் ஒருங்கிணைக்கப்பட்ட புதிய கலைத்திட்டத்தில் இப்பாடம் இடம்பெறாததால் இதற்கென கலைத்திட்டம் உருவாக்கப்படவில்லை. ஆதலால் மாணவர்கள் அடைய வேண்டிய கற்றல் நோக்கங்களும் கற்றல் திறன்களும் வரையறுக்கப்படவில்லை. எஸ்.பி.எம் தேர்வின் மதிப்பீட்டு நோக்கத்தை மட்டுமே முதன்மையாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டன. இந்நிலையிலேயே இப்பாடம் தேசிய இடைநிலைப்பள்ளிகளில் படிவம் 4 மற்றும் 5 மாணவர்களுக்குக் கற்றுத் தரப்பட்டு வந்துள்ளது. ஆகவே, இப்பனுவல்கள் தேசிய கல்விக் கொள்கையின் சமன்நிலை மாந்த உருவாக்கக் கூறுகளை உள்ளடக்கி உள்ளனவா என்பதை ஆராயவே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## ஆய்வு நோக்கம்

சமன்நிலை மாந்த உருவாத்தில் இடைநிலைப்பள்ளி மாணவர்களின் சுய சால்புடைமை வளர்ச்சிக்கு அகல்விளக்கு நாவலின் பங்கினை ஆராய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது இந்த ஆய்வு.

## ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வு தரவுசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வு அணுகுமுறையைத் தேர்ந்தெடுத்தற்கான காரணம் இலக்கியப் படைப்புகளை ஆராய்வதற்கு ஆவணப் பகுப்பாய்வு

முறை பொருத்தமாக அமைகின்றது என்று வலியுறுத்துகின்றார் Patton (2005)[6]. இந்த ஆய்வின் முதல் கட்டமாக, அகல்விளக்கு நாவலில் காணப்படும் சுய சால்புடைமைக் கூறுகள் அடையாளம் காணப்பட்டது. பிறகு அடையாளம் காணப்பட்ட சுய சால்புடைமைக் கூறுகள் அடங்கிய கருத்தறி வினா படிவத்தின்வழி அகல்விளக்கு நாவல் கற்றலில் மாணவர்கள் அடைந்த விளைவுகள் ஆராயப்பட்டுத் தொகுக்கப்பட்டன.

**தமிழ் இலக்கியக் கல்வி**

மலேசியாவில் தமிழ் இலக்கியக் கல்வி, தமிழ் சமூகத்தின் நிலையான வளர்ச்சிக்கான வித்தென்றால் அது மிகையாகாது. பன்னெடுங்காலமாக இடைநிலைப்பள்ளிகளில் படிவம் 4 மற்றும் படிவம் 5-க்கான இலக்கியக் கல்வி போதனையில் வழக்கில் இருந்த நாவல், நாடகம் மற்றும் கவிதைகள், தமிழ்ச் சமூகத்தின் அரசியல், பொருளாதாரம், சமூகவியல், பண்பாடு போன்ற கூறுகளின் வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்துள்ளன. மிகச் சிறந்த பல தமிழறிஞர்களின் இலக்கியப் படைப்புகள் இடைநிலைப்பள்ளி மாணவர்கள் அக, புற வளர்ச்சிக்கு உருதுணையாக விளங்கியுள்ளன. தமிழறிஞர் மு.வரதராசனின் கல்லோ காவியமோ?; அகல்விளக்கு, நா. பார்த்தசாரதியின் பொன்விளங்கு, குறிஞ்சி மலர்; மலேசிய நாவலாசிரியரின் இலட்சியப் பயணம் போன்ற நாவல்கள் இடைநிலைப்பள்ளி இலக்கியப் பாடத்திட்டத்தில் கற்பிக்கப்பட்டு வந்துள்ளன. கு.அழகிரிசாமியின் கவிச்சக்கரவர்த்தி, கலைஞரின் சிலப்பதிகாரம், காவிய நாயகி போன்ற நாடகங்களும் பாடநூல்களாகப் பயன்பாட்டில் இருந்தன. மேலும் உள்நாட்டு வெளிநாட்டு கவிஞர்களின் மரபுக் கவிதைகளும் இடைநிலைப்பள்ளிகளுக்கான இலக்கியப் பாடத்திட்டத்தில் இடம்பெற்றுப் போதிக்கப்பட்டு வருகின்றன.

இலக்கியக் கல்வியில் கவிதையே உயிர்நிலையான பகுதி (ந.சுப்புரெட்டியார், 2000)[2]. கவிஞர்கள் தம் வாழ்க்கை நுகர்வுகளிலிருந்தும் பட்டறிவிலிருந்தும் எழும் உணர்ச்சிகளையும் உயர் கருத்துகளையும் ஓசை இனிமை, சொல் நயம், பொருள் நயம் ஆகிய பண்புகள் நிறைந்த சொல்லோவியங்களால் வெளிப்படுத்துவர். கவிதைகளின் உயிர்நிலைக் கருத்தை உணர்ந்து அவற்றை இயற்றிய கவிஞனின் கருத்துகள், உணர்ச்சிகள் முதலியவற்றையும், அவன் கண்ட இயற்கை எழில், மக்கள் மனப்பான்மை, போன்றவற்றையும் மாணவர்களை நுகரச் செய்தல் சமநிலை மாந்தனின் உருவாக்கத்திற்கு வழிவகுக்கும்.

நாவல், நாடகம் போன்ற உரைநடை இலக்கியங்களைப் போதித்தலும் இலக்கிய கல்வியில் முக்கியமான ஒன்று. சமகால வாழ்க்கையின் வழக்குகளையும் சவால்களையும் நாவல், நாடகம் போன்ற இலக்கிய படைப்புகளின்வழி மாணவர்களுக்கு அறிவுறுத்திச் துலங்கச் செய்தலே இலக்கியம் கற்றலின் முக்கிய நோக்கமாக இருப்பினும் கடந்தகால வாழ்வியலின் அறிமுகத்தின்வழி மனித இனக்குழுக்களின் அடையாள நிலைநிறுத்தலையும் உணரச் செய்கிறது இலக்கியக் கல்வி. மேலும் எதிர்கால வாழ்க்கை வாழ்வதற்கான ஒத்திகையாகவும் இலக்கியக் கல்வி விளங்குகிறது.

தமிழ் இலக்கியப் படைப்புகள் வாழ்க்கையின் பல்வேறு திறப்புகளை வழிமொழிகின்ற கருவி என்றே கூறலாம். இதை வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பர் (Umar Junus, 1986)[7] இலக்கியம் மனிதனின் வாழ்க்கையைச் சுத்திகரிக்கும் ஆக்கப்பணியைச் செய்து வருகிறது. மனிதப் பண்புகளும் வாழ்வியல் அறங்களும் மதிப்பிழந்து கொண்டிருக்கும் வேகம்

நிறைந்த வாழ்க்கைச் சூழல் இன்றைய சமூகத்தைப் பெரிதும் பாதித்துள்ளது. இன்றையச் சமூகம் இதனை நெறிப்படுத்தி மேம்பாடடையச் செய்ய தமிழ் இலக்கியங்களின் பங்கு இன்றியமையாததாகும். (Ani Hj Omar, 2015)[8]

நாளைய உலகின் வாழ்க்கை சாவல்களைச் சமாளிக்கும் திறன் சார்ந்தே இன்றைய கல்வி முறை அமைந்துள்ளது. நாளைய வாழ்க்கையை நிலைப்படுத்திக் கொள்வதற்கு இன்றைய மாணவர்கள் அவசியம் பின்பற்றக் கூடியது தனிமனித ஒழுக்கமும் அறத்தின் வழி நிற்றலும்தான். நவீன கால வளர்ச்சியின் தாக்கத்தினால் இவ்விரண்டு கூறுகளையும் மாணவர்கள் கற்று ஒழுகுவது மிகப் பெரிய சவாலாகவே அமைந்து வருகிறது. இயந்திரமயமாகிக் கொண்டிருக்கும் நவீன வாழ்க்கைமுறையில் கல்வித்துறையும் கற்றல்கற்பித்தல் முறையும் முற்றிலும் இயந்திரத்தனமாகச் செயல்படத் தொடங்விட்ட நிலையில் மாணவர்களின் போக்கிலும் சிந்தனையிலும் இயந்திரத்தனம் புகுந்து விட்டது. மாணவர்கள் மத்தியில் மனிதம் குறைந்து ஒழுக்கப் பிறழ்வுகள் அதிகம் தோன்ற ஆரம்பித்துள்ளன. தங்களின்மேல் படருகின்ற இச்சிக்கலை மாணவர் சமூகம் அறியாமலேயே வாழ்க்கையைக் கடந்துகொண்டிருக்கின்றனர். இதற்குக் காரணமாக அமைவது இயந்திரத்தனம் அவர்களினுள் விதைத்திட்ட மனிதம்தேய்ந்த பொருள்முதல்வாத சிந்தனை. இச்சிக்கலை மாணவர் சமூகம் அறிந்து அதிலிருந்து விடுபடும் வழிகளையும் அவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். அதற்கு தகுந்த கருவியாகத் திகழ்வது இலக்கியக் கல்வியே. (Fathin Noor Ain Ramli, Azhar Hj. Wahid, 2018)[9]

தமிழ் இலக்கியக் கல்வி வாழ்க்கை சிக்கல் அடிப்படையிலான கற்றல். கவிதை, நாவல், நாடகம் போன்ற இலக்கியப் படைப்புகளின்வழி வாழ்க்கையில் நிகழும் பல்வேறான சிக்கலைகளை இலக்கியக் கல்வி அறிமுகப்படுத்துகிறது. அதுமட்டுமின்றி சிக்கல்களுக்கான தீர்வினைக் கண்டறிந்து செயல்படுத்தவும் இலக்கியக் கல்வி பெரும் துணைப்புரிகின்றது.

மலேசிய தேசியக் கல்விக் கொள்கைக்கு ஏற்ப தமிழ் இலக்கியக் கல்வியின் கலைத்திட்டம் அமைந்து அறிவாற்றல், ஒழுக்கம், உடல், உளம் மற்றும் சமூகத் தொடர்பு போன்ற கூறுகளை உள்ளடக்கி சமன்நிலை மாந்த உருவாக்கத்திற்கு வித்திடுகிறது (கே.எஸ்.எஸ்.எம் இலக்கியப் பாட தர அடைவு ஆவணம், 2018:1)[1] மலேசியக் கல்வி அமைச்சின் கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவினால் வரையப்பட்ட தமிழ் இலக்கியக் கலைத்திட்டம் மாணவர்கள் இலக்கியக் கூறுகளை அறிந்து கொள்வதையும் அதனைப் போற்றுவதையும் அதன்வழி பெறப்படும் படிப்பினையைத் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்துச் சிறந்த மாந்தராக விளங்வதையும் குறியிலக்காகக் கொண்டுள்ளது. தமிழ் இலக்கியக் கற்றல் கற்பித்தல்வழி, இடைநிலைப்பள்ளி மாணவர்கள் கீழ்க்காணும் நோக்கங்களை எய்துவர்:


அ) இலக்கிய வகைகளையும் கூறுகளையும் அறிந்து விவரித்தல்.
ஆ) இலக்கியப் படைப்புகளையும் படைப்பாளர்களையும் பற்றி விவரித்தல்.
இ) இலக்கியப் படைப்புகளை வாசித்துப் புரிந்து கொள்வதோடு அவற்றைப் பகுப்பாய்வும் செய்தல்.
ஈ) இலக்கியப் படைப்புகளின் முருகுணர்ச்சியை உய்த்துணர்ந்து விவரித்தல்.
உ) இலக்கியப் படைப்புகளைத் திறனாய்வு செய்து அவற்றை விளக்குதல்.
ஊ) இலக்கியப் படைப்புகளிலுள்ள உயரிய பண்புகளை நலம் பாராட்டுதல்.

மேற்கண்ட கூறுகளை இறுதி அடைவாகக் கொண்ட தமிழ் இலக்கியக் கற்றல்கற்பித்தல் மாணவப் பருவத்தில் இருக்கும் இளையோர்களை அறிவாற்றல், உடல், உளம்,

ஒழுக்கம் போன்ற கூறுகளில் மேம்படுத்துவதோடு தனிமனித சுய சால்புடைமை பண்புகள் வளர்வதையும் உறுதிச் செய்கிறது. மேலும் மாணவனின் தனிமனித வளர்ச்சி அவனைச் சார்ந்த சமூகத்தின் வளர்ச்சியை உறுதிச் செய்வதோடு சமூக பண்பாட்டு மரபுகள் போற்றப்படுவதற்கும் இலக்கியக் கல்வி உதவுகிறது. இவ்வளர்ச்சி ஒரு சமூகத்தின் அடையாள நிலைநிறுத்தலுக்கு அடைப்படையாக அமைந்து நவீன கால வளர்ச்சியில் தன் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள வழிகோலுகிறது.

**மாணவர் சுய சால்புடைமை வளர்ச்சியில் தமிழ் இலக்கியக் கல்வி**

ஒரு சமூகத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்கும் நாகரிக மேன்மைக்கும் அடிப்படையாக விளங்குவது அச்சமூகத்தில் அங்கத்தினர்களாக இருக்கின்றவர்களின் தனிமனித மேம்பாடுதான். அம்மேம்பாட்டிற்குக் கல்வியே அவசியமாகிறது. ஒரு மாணவனின் சுய சால்புடைமைக் கூறுகளை இலக்கியக் கல்வியின்வழி வலுப்படுத்துவதன் மூலம் அக, புறக் கூறுகளில் சமநிலைத்தன்மை வாய்ந்த மாந்தனை உருவாக்க முடிகின்றது. லிக்கோனா (2013) அவர்களின் கூற்றுப்படி மாணவர்களின் சமன்நிலை மாந்தனாக்கம் ஒரு சாராரின் முயற்சியினால் உருவாகுவதில்லை. அது பல்லடுக்குகள் கொண்ட பலக் கூறுகளின் கூட்டு முயற்சியினால் தோன்றுவது.




*வரைபடம் 1 :* இலக்கியக் கல்வியில் சுய சால்புடைமைப் பண்பு உருவாக்கம்

மேற்காணும் வரைப்படத்தில் ஒரு மாந்தனின் சுய சால்புடைமை பண்புகள் உருவாக்கத்திற்கு இந்நாட்டின் கல்விமுறை நேரடி பங்கு வகிப்பதைக் காண முடிகிறது. வகுப்பறைச் சூழலில் வரையறுக்கப்பட்ட கலைத்திட்டதின்வழியும் ஆசிரியரின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள்வழியும் இடைநிலைப்பள்ளி மாணவர்களிடையே சுய சால்புடைமை பண்பு உருவாக்கம் நிகழ்கிறது. இதன்வழி கீழ்க்காணும் சுய சால்புடைமைக் கூறுகள்

மாணவர்களிடையே வலுப்படுத்தப்படுகின்றன:

அ) தலைமைத்துவமும் நன்நெறியும்
ஆ) தன்னம்பிக்கையும் தன்மதிப்பும்
இ) சுய ஆற்றலும் ஆக்கமுடைமையும்
ஈ) தனிநபர், சமுதாயத் தொடர்பு

தமிழ் இலக்கியக் கல்வியின்வழி இடைநிலைப்பள்ளி மாணவர்களிடையே சுய சால்புடைமைக் கூறுகளை வலுப்படுத்துவதற்கு நாவல், நாடகம் மற்றும் கவிதைகள் என மூன்று இலக்கிய வகை பயன்படுத்தப்படுகின்றன.

அட்டவணை 1:
*2019ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட தமிழ் இலக்கியக் கல்விக்கான பாடநூல்கள்*

| **இலக்கிய வகை** | **தலைப்பு** | **எழுத்தாளர்** |
|---|---|---|
| நாவல் | அகல்விளக்கு | மு. வரதராசன் |
| நாடகம் | கவிச்சக்கரவர்த்தி | கு. அழகிரிசாமி |
| கவிதைகள் | - தமிழ்ப்பேறு! தவப்பேறு!<br>- நான் ஒரு பித்தன்<br>- விண்மீன்<br>- சாணைக்கல்<br>- தாய்<br>- வாழ்ந்து காட்டுவோம்<br>- கல்வி<br>- தமிழர்களின் தற்கால நிலைமை<br>- பத்திரிகை<br>- வெறுங்கை என்பது மூடத்தனம்<br>- ரப்பரும் தமிழரும்<br>- மாணவர்க்கு | சீனி நைனா முகம்மது<br>ஐ. உலகநாதன்<br>கரு.திருவரசு<br>எல்லோன்<br>வாலி<br>கோவி மணிதாசன்<br>முரசு நெடுமாரன்<br>பாரதியார்<br>பாரதிதாசன்<br>தாராபாரதி<br>சா.ஆ. அன்பானந்தன்<br>நாமக்கல் இராமலிங்கல் பிள்ளை |

மேற்காணும் இலக்கியப் பாடநூல்களில் இவ்வாய்வுக்கு அகல்விளக்கு நாவல் தேர்ந்தடுக்கப்பட்டது. அகல்விளக்கு நாவல் மாணவர்களிடையே சுய சால்புடைமைக் கூறுகளை வலுப்படுத்துகின்ற படிப்பினைகளையும் நன்நெறிக் கூறுகளையும் கொண்டுள்ளதா என்று ஆராயப்பட்டப்படும். சமன்நிலை மாணவர் உருவாக்கதில் சுய சால்புடைமைக் கூறுகளான தலைமைத்துவமும் நன்நெறியும், தன்னம்பிக்கையும் தன்மதிப்பும், சுய ஆற்றலும் ஆக்கமுடைமையும், தனிநபர், சமுதாயத் தொடர்பு இவ்வாய்வில் முக்கிய இடம்பெறுகின்றன.

எஸ்.பி.எம் தேர்வில் தமிழ் இலக்கியத்தைத் தேர்வுப் பாடமாக எடுக்கின்ற 30 மாணவர்கள் இவ்வாய்விற்கு மாதிரிகளாகத் தேர்தெடுக்கப்பட்டனர். அகல்விளக்கு நாவலை முழுமையாக வாசித்த பின்பு மாணவர்களுக்குச் சுய சால்புடைமைக் கூறுகள் கருத்தறி வினா தாள்கள் வழங்கப்பட்டுக் கருத்தறியப்பட்டது. கீழ்க்காணும் அட்டவணை 1 மாணவர்கள் வாசித்த

இலக்கியப் பனுவல்களில் காணப்படும் சுய சால்புடைமைக் கூறுகளைக் காட்டுகிறது.

அட்டவணை 1:
*அகல்விளக்கு நாவலில் சுய சால்புடைமை பண்புகள்*

| இலக்கிய வகை / சுயசால்புடைமை | தலைமைத்துவம் நன்நெறி | தன்னம்பிக்கை தன்மதிப்பு | ஆற்றல் ஆக்கமுடைமை | தனிநபர், சமூகத்தொடர்பு |
|---|---|---|---|---|
| அகல்விளக்கு நாவல் | / | / | / | / |

**அகல்விளக்கு நாவலில் சுய சால்புடைமைக் கூறுகள்**

நல்லொழுக்கமும் மனக்கட்டுப்பாடும் நல்வாழ்விற்கு அடித்தளம் எனும் கருப்பொருளில் படைக்கப்பட்ட அகல்விளக்கு நாவல் வாழ்க்கையின் சவால்களை எதிர்த்துப் போராடும் இரண்டு இளைஞர்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. சந்திரனும் வேலய்யனும் இளமை கால நண்பர்கள். இருவரும் ஒரே பள்ளியில் படித்து, ஒன்றாகவே விளையாடி ஒன்றாகவே வளர்ந்தவர்கள். பத்தாவது வகுப்புக்குப் பிறகு, அவர்கள் வாழ்வில் பிரிவு ஏற்பட்டது. பிரிவு விரிந்து பரந்து ஒருவரை ஒருவர் எட்டாத அளவிற்குப் கொண்டு சேர்த்துவிட்டது.

சந்திரனுடைய வாழ்வு மேடு பள்ளம் நிறைந்தது. வேலய்யனுடைய வாழ்வு சமவெளியில் அமைதியாகச் செல்லும் பெரிய ஆற்றை ஒத்தது (மு.வரதராசன், 2015)[10]. சந்திரனைப்போல் நல்ல அழகும் கூரிய அறிவும் பெற்றிருந்தும் கட்டுப்பாடடற்ற வாழ்க்கை முறையினால் சீரழிந்து தாமும் கெட்டு தன்னைச் சார்ந்துள்ளவர்களுக்கும் சுமையாக அமைந்தது. மாறாக வேலய்யன் அறிவிலும் அழகிலும் குறைவாக இருந்தாலும் சிறந்த பண்புகளைப் பெற்றுக் கட்டுப்பாடோடு வாழ்ந்ததால் வாழ்க்கைச் சிறப்பாக அமைந்தது.

இந்த நாவலை மேலோட்டமாக வாசித்தால் வாழ்க்கைக்குத் தேவையான பண்புகளையும் சிறப்புற்று வாழ பின்பற்ற வேண்டிய நெறிகளையும் இளைஞர்களுக்குப் போதிப்பதுபோல் அமைந்திருக்கும். இருப்பினும் சற்று ஆழமாகப் பார்க்கும்போது வலிய ஆளுமைகளை உருவாக்க உகந்த நுட்பமான சுய சால்புடைமை வலுப்படுத்தலுக்கான கருத்துகள் பரந்து இருப்பதைக் காண முடிகின்றது. வாழ்வில் விழுமியங்கள் இன்றியமையாதது என்றும் அது தரும் மதிப்பு வாழ்க்கை உயர்த்தும் என்ற சிந்தனையையும் இந்நாவலின்வழி அறிய முடிகிறது.

**தலைமைத்துவமும் நன்நெறியும்**

இளைஞர்களின் வாழ்க்கையின் வெற்றிக்குத் தலைத்துவப்பண்பும் நன்நெறிக் கூறுகளும் இன்றியமையாதவையென அகல்விளக்கு நாவலில் மு.வரதராசன் வலியுறுத்துகின்றார். இந்நாவலில் கல்வியில் பின்தங்கியவனாகக் காட்டப்பட்டாலும் வேலய்யன் தலைமைத்துவப் பண்பினாலும் நன்னெறிகளைப் பின்பற்றியதாலும் வாழ்க்கையில் மேன்மையடைகின்றான். தன்னைச் சுயமாக நிர்வகித்துக் கொள்ளும் தலைமைப்பண்பையும் தன்னைச் சார்ந்துள்ள

உறவுகளை நிர்வகிப்பதிலும் திறன் பெற்றவனாக வேலய்யன் திகழ்கின்றான். தன் புறத்தோற்றத்திலும் கல்வி நிலையிலும் சந்திரனை விட சற்றுக் தாழ்ந்தவனாகக் காட்டப்பட்டாலும் அவ்விரண்டு குறைகளையும் பெருந்தடையாகக் கொள்ளாமல் குறிக்கோளிலிருந்து வழுவாது தன்னை மிகச் சிறப்பாக நிர்வகித்து வாழ்க்கையில் மேன்மையடைகிறான். வேலய்யனின் அழகில்லாத தோற்றத்தத்தைச் சந்திரனுடன் ஒப்பிட்டு, அவனைப் புறக்கணித்த ஒரு சிலரின் செயலினால் சங்கடத்திற்குள்ளானாலும் அவற்றை ஒரு பொருட்டாகக் கொள்ளவில்லை. அந்தப் புறக்கணிப்புகளும், நிகழ்ந்த தன்மான குறைச்சல் சம்பவங்களும் தன்னைப் பாதிக்காமல் நேர்மறை சிந்தனையோடு செயல்பட்டு முன்னேறுகிறான். இது வேலய்யனின் சுய நிர்வகிப்புத் திறனையே காட்டுகிறது. மேலும் தந்தை முதுகு கட்டி வலியால் அவதியுற்றபோது தந்தையின் கடையை சில காலம் நிர்வகிக்கின்றான். அதோடு சந்திரன், மாலன், மணிமேகலை, சாமண்ணா போன்றோர் வாழ்க்கையில் சிக்கலை எதிர்நோக்கியபோது அவர்களுக்கெல்லாம் நல்ல வழிகாட்டியாக இருந்து சிக்கலைத் தீர்க்க உதவியது வேலய்யனின் தலைமைத்துவப் பண்பையே காட்டுகிறது.

**தன்னம்பிக்கையும் தன்மதிப்பும்**

தன்னம்பிக்கை என்பது தன்னால் இன்ன காரியத்தை இன்னின்ன கருவிகளால் இயற்றிட இயலும் என்று உறுதிக் கொள்வதே ஆகும். இன்றைய இளைஞர்களின் வளமான எதிர்காலத்திற்கு அச்சாணியாக விளங்குவது அவர்கள் கொண்டிருக்கின்ற தன்னம்பிக்கையே ஆகும். தன்னம்பிக்கையே முயற்சிக்கான வித்தாக அமைகிறது. அகல்விளக்கு நாவலில் தன்னம்பிக்கை எனும் சுய சால்புடைமைக் கூறு வேலய்யனின் பாத்திரத்தின்வழி வலியுறுத்தப்படுகின்றது. மேலும் இந்நாவலின் வரும் பாக்கிய அம்மையாரின் பாத்திரப்படைப்பும் இதற்குச் சான்றாக அமைகின்றது.

எஸ்.எஸ்.எல்.சி தேர்வின்போது நிமோனியாக் காய்ச்சலில் பாதிக்கப்பட்ட வேலய்யன் தேர்வில் தோல்வி அடைகின்றான். தனக்குக் கல்வியில் தொடர்ந்து வழிகாட்டியாக இருந்த சந்திரன் அவ்வாண்டு எஸ்.எஸ்.எல்.சி தேர்வில் தேர்ச்சிப் பெற்று சென்னைக் கல்லூரிக்கு மேற்படிப்புக்காகச் சென்று விடுகின்றான். இருப்பினும் வேலய்யன் தன்னம்பிக்கை கொண்டு மறுஆண்டு அத்தேர்வுக்கு அமர்ந்து சந்திரன் வழிகாட்டல் இல்லாமலேயே சுயமாக விடாமுயற்சியோடு படித்து வெற்றிப்பெறுகிறான். கணவனை இழந்து தந்தையோடும் தம்பியோடும் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் பாக்கிய அம்மையாரின் பாத்திரமும் தன்னம்பிக்கைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. இள வயதிலேயே கணவனை இழந்த பாக்கிய அம்மையார் தன் தந்தையுடனும் தம்பியுடம் வாழ்க்கை நடத்தி வருகிறார். சில காலங்களிலேயே தந்தையும் மரணம் அடைய வாழ்க்கையில் துவண்டு போகிறார். தம்பி விநாயகமும் திருமணத்திற்குப் பிறகு தனிக்குடித்தனம் சென்றுவிடத் தனிமைக்குள்ளாகிறார். ஆனாலும் தான் கடந்து வந்த துன்பங்களில் உழன்று வாழ்க்கை தொலைத்துக் கொள்ளாமல் தன்னம்பிக்கையுடன் செயல்படுகிறார் பாக்கிய அம்மையார். அவர் வாசித்த அறநூல்களின் கருத்துகளே அவரைத் தன்னம்பிக்கையோடு செயல்படவைத்துப் பிறருக்கு பயன் உண்டாகும் வாழத் தூண்டியது.

> ‘அத்தகைய துக்கத்தைப் பெற்ற பாக்கிய அம்மையார் தம் துன்பங்களை
> எல்லாம் மறந்து ஆற்றியிருந்து திருக்குறளையும் திரு.வி.க. போன்ற

> பெரியோர்களின் நூல்களையும் படித்துப் பயன்பெற்று ஒளிவிளக்காய்த் திகழ்கிறார்’. (மு.வரதராசன், 2015)[10]

தன்மதிப்பு என்பது ஒழுக்கமிக்க செயல்பாடுகளால் பிறர் போற்ற வாழ்வது. நிறைந்த கல்வி, மரியாதைப் பண்பு, பெண்களை மதித்தல், உறவுகளைப் போற்றுதல் போன்ற செயல்பாடுகள் ஒருனுக்கு தன் மதிப்பை உயர்த்திக் காட்டும். இந்நாவலில் வேலய்யன் தன்மதிப்பு மிகுந்த பாத்திரமாக வலம் வருகின்றான். அதே வேளையில் சந்திரனும், மாலனும் தன்மதிப்பைப் போற்ற இயலாதவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். மிக ஒழுக்கமாக வாழ்ந்து உன்னத நிலையை அடைந்த வேலய்யன் பிறர் போற்ற வாழ்கிறான். ஆனால் சந்திரனோ மனக்கட்டுப்பாடில்லாமல் பாலியல் சிக்கல்களுக்கு ஆளாகி தன்மதிப்பை இழந்து ஊர் தூற்ற வாழ்கிறான்.

> ’சந்திரனைப் போல் நல்ல அழகும், கூரிய அறிவும் பெற்று அதனால் செருக்கடைந்து சீரழிந்து தாமும் கெட்டுப் பிறர்க்கும் சுமையாக வாழ்வதைவிட வேலய்யனைப்போல் அறிவு குறைவாக இருந்தாலும் சிறந்த பண்புகளைப் பெற்று அடக்கமான வாழ்வு வாழ்ந்தால் போதும் என்ற உயர்ந்த வாழ்க்கைக் குறிக்கோள் இக்கதையைப் படிக்கின்வர்கள் உள்ளத்தில் உருவாகும். (மு.வரதராசன், 2015)[10]

மேற்கண்ட பாத்திரங்களின்வழி சுய சால்புடைமைக் கூறுகளான தன்னம்பிக்கையும் தன்மதிப்பும் போற்றலும் இந்நாவலில் உணர்த்தப்பட்டுள்ளன. இந்நாவலை வாசிக்கும் மாணவர்களின் சுய சால்புடைமைக் கூறுகள் வலுவடையும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

## ஆற்றலும் ஆக்கமுடையும்

உடல் பலமும் மன நலனும் ஒரு தனிமனிதனின் ஆற்றலுக்கான ஊற்று. அந்த ஆற்றல்மிக்க செயல்பாடுகளின் நேர்மறை விளைவுகள்தான் ஆக்கமுடைமையாகும். ஆக்கமுடைமை தன்னை உயர்த்துவதோடு மட்டுமல்லாது பிறருக்கு எவ்வகை துன்பத்தையும் தராது. இந்நாவலில் ஆற்றல்மிக்க செயல்பாடு கொண்டவர்களாகச் சந்திரன், வேலய்யன், பாக்கிய அம்மையார் மற்றும் சாந்தலிங்கம் படைக்கப்பட்டுள்ளனர். சந்திரன் வாலாசாவில் கல்வி பயிலும் காலத்தில் ஆற்றல்மிக்க செயல்பாடு கொண்டவனாக இருக்கின்றான். கல்வி முதன்மை மாணவனாக விளங்குவதோடு கணிதப் பாடத்தில் பின்தங்யிருந்த வேலய்யனுக்கு வழிகாட்டி அவனையும் உயர்த்துகிறான். அவ்வாறே பாக்கிய அம்மையாரும் அறநூல்கள் வாசிப்பினால் தன் அறிவாற்றலைப் பெருக்கிக் கொண்டு தன் வீட்டுப் பக்கத்தில் இருக்கும் மாணவர்களுக்குச் சிறப்பு வகுப்புகள் நடத்துகிறார். அதோடு இல்லற வாழ்வில் அதிருப்தி அடைந்திருந்த மணிமேகலைக்கும் ஆக்கப்பூர்வமான கருத்துகளை வழங்கி அறிவுறுத்துகின்றார்.

இந்நாவலில் காந்தியவாதியாக வரும் சாந்தலிங்கமும் ஆங்கிலேயர்களால் காந்தி கைது செய்யப்பட்டபோது மாணவர் அணி திரட்டி போராட்டம் நடத்துகிறான். அப்போராட்டத்தின்வழி கல்லூரி மாணவர்களிடையே நாட்டுப் பற்றை ஏற்படுத்தி இந்திய சுதந்திரப் போராட்ட உணர்வைத் தூண்டுகிறான்.

இப்பாத்திரங்களின்வழி ஆற்றல் மற்றும் ஆக்கமுடைமை கூறுகள் மாணவர்கள் மத்தியில் விதைக்கப்படுகின்றன.

**தனிநபர் மற்றும் சமூகத் தொடர்பு**

பிறருடன் நல்வினை பயக்கும் தொடர்பு ஒரு மனிதனின் வாழ்க்கையின் வெற்றிக்கு அடிப்படையானது. நண்பன், உறவினர், அண்டை அயலார், ஆசிரியர் என நாம் பலருடன் பல்வேறு தேவைகளுக்காகத் தொடர்பு கொண்டு நகருதல் வாழ்க்கையின் இயல்பாகி விட்டது. நாம் வாழும் சமூகத்தில் அங்கத்தினர்களாக விளங்கும் இத்தகையோருடன் நல்லுறவைப் பேணுதல் அவசியமாகும்.

அப்படி இல்லாமல் நாம் தீவினை பயக்கும் உறவுகளோடு சேர்ந்து பழகும்போது நம் வாழ்க்கை பல சிக்கல்களுக்கு உட்பட்டு போராட்டக்களமாகி விடுகிறது. இந்நாவலில் வேலய்யன் கொண்டிருந்த பிறருடனான நேர்மறை தொடர்புகள் அவன் வாழ்க்கையின் வெற்றிக்குத் துணை நின்றது. தொடக்கத்தில் வேலய்யன் சந்திரனுடன் கொண்ட நட்பு கல்வியில் அவனை உயர்வடையச் செய்தது. மேலும் அம்மா, அப்பா, சுற்றத்தார் எனத் தன்னைச் சுற்றி உள்ளவர்களை மதித்து அரவணைத்துச் செல்லுகின்ற போக்கு வேலய்யனுக்கு அமைதியான வாழ்க்கை சூழலை ஏற்படுத்தித் தந்தது. தன்னைச் சார்ந்துள்ள பிற உறவுகளுக்குத் தீங்கு விளைவிக்காமல் வாழ்ந்த வேலய்யன் போற்றுதலுக்குரியவனாகத் தோன்றுகிறான்.

ஆனால் பிறருடனான எதிர்மறை தொடர்பினால் சீரழிந்த சந்திரனின் வாழ்க்கை நமக்குப் பாடமாக அமைகிறது. பல பெண்களுடனான் வரம்வற்ற பாலியல் தொடர்பு சந்திரனின் வாழ்க்கையை முற்றிலும் சீரழித்தது. அதோடுமட்டுமல்லாமல் சந்திரனின் இத்தகையப் போக்குத் தன்னைச் சார்ந்துள்ள பிறரின் வாழ்க்கையையும் சிக்கலுக்குள்ளாக்கியது. சந்திரனின் வரம்வற்ற பாலியல் தொடர்பு தனக்கு மனைவியாக வாய்த்த வள்ளியின் வாழ்க்கையைச் சூறையாடியது. மேலும் கல்லூரி காலத்தில் கூடா சேர்க்கையினால் மது, சிகரெட், வகுப்பிற்கு மட்டம் போடுதல், கல்வியில் அக்கறையின்மை போன்ற தீய பழக்கங்களுக்கு ஆளாகிய சந்திரனின் கல்வியில் பின்தங்க நேரிட்டது. வேலய்யன் மற்றும் சந்திரன் கொண்டிருந்த பிறருடனான தொடர்பே அவர்களின் வாழ்க்கையின் விளைவுகளை முடிவு செய்தன என்பதை இந்நாவலின்வழி அறியமுடிகிறது.

அட்டவணை 2:

*அகல்விளக்கு நாவலை வாசித்த மாணவர்களின் கருத்தறி வினா முடிவுகள்*

| **எண்** | **மாணவர் கருத்து** | **ஆய்வுக்கு உட்பட்டோர்** | **ஆம்** | | **இல்லை** | |
|---|---|---|---|---|---|---|
| | | | **(எ)** | **(%)** | **(எ)** | **(%)** |
| 1. | அகல்விளக்கு நாவல் உயர்ந்த நன்நெறிகளையும் படிப்பினைகளையும் கொண்டுள்ளது. | 30 | 29 | 96.7 | 1 | 3.3 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2. | அகல்விளக்கு நாவல் இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்கு உகந்தவையாக இருக்கின்றது | 30 | 30 | 100 | 0 | 0 |
| 3. | அகல்விளக்கு நாவல் மாணவர்களிடையே சுயசால்புடைமையை வளர்க்கின்றது | 30 | 26 | 9 0 | 4 | 10 |

மேற்காணும் அட்டவனை அகல்விளக்கு நாவல் தொடர்பான கருத்தறி வினாவின் முடிவுகளைக் காட்டுகிறது. மாணவர்களிடையே சுய சால்புடைமைக் கூறுகளை வலுப்படுத்திவதில் அகல்விளக்கு நாவலின் பங்களிப்பை ஆராயும் வகையில் இக்கருத்தறி வினா அமைந்துள்ளது. இவ்வாய்வில் பங்கேற்ற 30 மாணவர்களில் 29 மாணவர்கள் (96.7%) அகல்விளக்கு நாவல் உயர்ந்த நன்நெறிகளையும் படிப்பினைகளையும் கொண்டுள்ளதாகப் பதிலளித்துள்ளனர். மேலும் இக்கருத்தறி வினாவின் இரண்டாவது கேள்விக்கு 30 மாணவர்களுமே அகல்விளக்கு நாவல் இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்கு உகந்ததாக இருப்பதாக ஒப்புக் கொண்டுள்ளனர். அகல்விளக்கு நாவல் மாணவர்களிடையே சுய சால்புடைமையை வலுப்படுத்துகின்றதா? என்ற வினாவிற்கு 26 மாணவர்கள் (96%) இசைவு தெரிவித்துள்ளனர்.

அட்டவணை 3:
*இலக்கியக் கற்றல்கற்பித்தலின்வழி மாணவர்களிடையே ஏற்பட்ட விளைவும் பயனும்*

| **எண்** | **விளைவும் பயனும்** | **மாதிரிகள்** | **அதீத ஒப்புதல்** | | **ஒப்புதல்** | | **மறுத்தல்** | | **கடுமையாக மறுத்தல்** | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | **(N)** | **(%)** | **(N)** | **(%)** | **(N)** | **(%)** | **(N)** | **(%)** |
| 1. | இலக்கியப் பாடநூல்கள் தமிழ் இலக்கியம் பயில ஆர்வத்தைத் தூண்டியது. | 30 | 14 | 50.0 | 13 | 50.0 | 3 | 0.0 | 0 | 0.0 |
| 2. | இலக்கியப் பாடநூல்கள் | 30 | 19 | 63.3 | 11 | 36.7 | 0 | 0.0 | 0 | 0.0 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | உயர்ந்த நன்நெறிக் கூறுகளையும் படிப்பினைகளையும் கொண்டுள்ளன. | | | | | | | | | |
| 3. | இலக்கியக் கற்றல்கற்பித்தல் சுய சால்புடைமைக் கூறுகளை மாணவர்களிடயே விதைக்கிறது. | 30 | 15 | 50.0 | 13 | 43.3 | 2 | 6.7 | 0 | 0.0 |
| 4. | இலக்கியப் பாடநூல்கள் மாணவர்களுக்கு நல்ல வழிகாட்டியாக அமைகின்றன. | 30 | 18 | 60.0 | 8 | 26.7 | 4 | 13.3 | 0 | 0.0 |

மேற்காணும் அட்டவணை இலக்கியக் கற்றல்கற்பித்தலின்வழி மாணவர்களிடையே ஏற்பட்ட விளைவும் பயனும் என்ற ஆய்வுக்கான கருத்தறி வினாவின் முடிவுகளைக் காட்டுகிறது. இலக்கியப் பாடநூல்கள் தமிழ் இலக்கியம் பயில ஆர்வத்தைத் தூண்டுகின்ற என்ற கருத்தறி வினாவுக்கு 14 மாணவர்கள் அதாவது 47 விழுக்காட்டு மாணவர்கள் அதீத ஒப்புதல் அளித்துள்ளனர். மேலும் 13 மாணவர்கள் ஒப்புதல் அளித்துள்ளனர். இவ்விரண்டு நிலைகளையும் ஆராயும்போது இலக்கியப் பாடநூல்கள் தமிழ் இலக்கியம் பயில ஆர்வத்தைத் தூண்டுவதாக 27 (90%) மாணவர்கள் ஒப்புதல் தெரிவித்துள்ளனர்.

அடுத்ததாக இலக்கியப் பாடநூல்கள் உயர்ந்த நன்நெறிக் கூறுகளையும் படிப்பினைகளையும் கொண்டுள்ளன என்ற கருத்தறி வினாவுக்கு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 30 மாணவர்களுமே முழு ஒப்புதல் தெரிவித்துள்ளனர். இது வழக்கில் இருக்கின்ற நாவல், நாடகம் மற்றும் கவிதைகள் அனைத்தும் மாணவர்களுக்கு உயர்ந்த நன்நெறி பண்புகளைப் புகட்டும் ஊடமாகத் திகழ்கின்றன என்பதை உறுதிச் செய்கிறது.

மொத்தம் 28 மாணவர்கள் அல்லது 93 விழுக்காட்டினர் இடைநிலைப்பள்ளிகளில் நடைபெறுகின்ற தமிழ் இலக்கியப் பாடம் கற்றல்கற்பித்தல் நடவடிக்கை மாணவர்களிடையே சுய சால்புடைமைக் கூறுகளை விதைக்கின்றன என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர். வெறும் 3 மாணவர்கள் மட்டும் மாற்றுக் கருத்தைக் கொண்டுள்ளனர்.

வழக்கில் இருக்கின்ற இலக்கியப் பாடநூல்கள் இடைநிலைப்பள்ளி மாணவர்களின் எதிர்கால தேவைகளைப் பூர்த்திச் செய்து அவர்களின் வாழ்கைக்கு நல்ல வழிகாட்டிகளாக அமைகின்றன என்பதை 26 (86%) மாணவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். மாறாக 4

மாணவர்கள் அல்லது 14 விழுக்காட்டினர் இக்கருத்திற்குத் தங்களின் ஒப்புதலை மறுத்துள்ளனர்.

ஒட்டுமொத்தமாக இக்கருத்தறி வினாக்களின் முடிவுகளைப் பார்க்கும்போது இடைநிலைப்பள்ளிகளில் தமிழ் இலக்கியப் பாடம் மாணவர்களிடையே நேர்மறையான விளைவுகளைப் ஏற்படுத்தியுள்ளதைக் காணமுடிகின்றது. 90 விழுக்காட்டிற்கும் மேலான மாணவர்கள் தமிழ் இலக்கியக் கல்வியின்வழி உயர்ந்த நன்நெறி பண்புகளைக் வளர்த்துக் கொண்டுள்ளனர் என்பது நிரூபனமாகிறது. அதோடு அம்மாணவர்களின் சுய சால்புடைமைக் கூறுகளும் தமிழ் இலக்கியக் கல்வியின்வழி வலுப்படுத்தப்பட்டு மேன்மையடைந்துள்ளதையும் அறிய முடிகிறது.

**முடிவு**

இலக்கியப் படைப்பாளர்களின் உயர்ந்த சிந்தனைகள் மாணவர்களின் அறிவாற்றல், உளம், நன்நெறி மற்றும் உடல் நலத்தைப் பேணுவதில் முக்கிய பங்காற்றுகின்றன. இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்கென தேர்ந்தெடுக்கப்பட்டுப் போதிக்கப்பட்டு வருகின்ற நாவல், நாடகம் மற்றும் கவிதைகள் மிகச் சீரிய உயர் கருத்துகளைக் கொண்டுள்ளன. இவை மாணவர்களை நல்வழிப்படுத்துவதற்கும் வாழ்க்கை சவால்களை எதிர்நோக்குவதற்கும் பெரிதும் துணைப் புரிகின்றன.

இவ்வகை இலக்கியப் பனுவல்களை வாசிப்பது மாணவர்களிடையே கற்பனையாற்றலை வளப்படுத்திப் படைப்பாக்கத் திறனை மேம்படுத்துவதோடு அதனூடாக வெளிப்படுகின்ற படிப்பினைகளின்வழி சுய சால்புடைமைக் கூறுகளையும் வலுப்படுத்துகின்றன. வெறும் பொழுது போக்கு நோக்கத்திற்காக இலக்கியங்கள் வாசிக்கப்படுவதில்லை மாறாக நுகருவோரின் அகம் மற்றும் புற வளர்ச்சிக்காகவும் வாசிக்கப்படுகின்றன. இதன்வழி நுகருவோரிடையே (மாணவர்கள்) ஒழுக்கம் சார்ந்த சிக்கல்களைக் குறைத்துப் பண்பட்ட எதிர்கால தலைமுறையை உருவாக்க முடியும்.

தமிழ் இலக்கியக் கல்வியின்வழி மாணவர்களிடையே சுய சால்புடைமைக் கூறுகளை வலுப்படுத்துவதற்குப் பாடநூல்களின் தேர்வு மிக முக்கியமானது. மாணவர்களின் தற்கால வாழ்க்கை சூழலை மையமாகக் கொண்டிருத்தல் அவசியமாகிறது. மேலும் சமகாலத்தில் ஒரு மாணவன் சந்திக்கும் சிக்கலைகளை அடையாளப்படுத்துவதோடு அதற்கான தீர்வையும் முன்வைக்கும் இலக்கியப் படைப்புகளே போதிக்கப்படவேண்டும்.

தற்போது வழக்கில் இருக்கின்ற இலக்கியப் பாடநூல்களான மு.வரதராசனின் அகல்விளக்கு நாவல், கு. அழகிரிசாமியின் கவிச்சக்கரவர்த்தி நாடகம் மேலும் 12 மரபுக்கவிதைகள் உயர்ந்த நன்நெறிகளைக் கொண்டிருக்கின்றன. இவை இடைநிலைப்பள்ளி மாணவர்களிடையே சுய சால்புடைமைக் கூறுகளை வலுப்படுத்துவதில் பெரிதும் துணைப்புரிகின்றன.

**மேற்கோள் நூல்கள்**:


1. Ministry of Education. (2018). *Curriculum Standard Document and Assessment of Tamil Literature Forms 4 & 5*. Kuala Lumpur: Curriculum Development Division.
2. Suppureddiyaar. (2000). *Tamil Payitrum Murai [Tamil Teaching Method]*. Citambaram: Meyappan Tamil Research Centre.
3. Husairi Hussin, Nor hasimah Ismail, Mohd Isha Awang. (2020). *Keupayaan Novel Komsas Menerapkan Nilai Perpaduan Bersikap Terbuka dalam Kalangan Murid [The Ability of Komsas Novel to Apply the Value of Open Unity Among Students]*. Tanjung Malim: Sultan Idris Education University.
4. Chew Fong Peng (2010). *Penerapan Nilai-nilai Murni Menerusi KOMSAS dalam Sistem Pendidikan Malaysia [Application of Noble Values Through KOMSAS in the Malaysian Education System]*. Sosiohumanika, 3(1) 2010.
5. Abdullah, Nurul Raihana, and Norila Md Salleh. (2016) Peranan Watak Utama Menerusi Penonjolan Nilai-Nilai Murni Kbsm Dalam Teks Komsas Novel Songket Berbenang Emas [The Role of the Main Character Through the Prominence of Kbsm's Pure Values in the Text of Komsas Novel Songket Berbenang Emas]. *Journal of Malay Civilization 11* (December 9, 2016)
6. Patton, M. Q. (2005). *Qualitative research. Encyclopedia of statistics in behavioral science. 3*, 1633 - 1636.
7. Umar Junus. (1986). *Sosiologi Sastera: Persoalan Teori Dan Metode [Sociology of Literature: The Problem of Theory and Method]*. Kuala Lumpur: DBP
8. Aini Hj Omar. (2015). *Pendidikan sastera remaja di Malaysia dalam membina generasi unggul barasaskan Falsafah Pendidikan Negara [Adolescent literature education in Malaysia in building a superior generationbased on the National Education Philosophy]*. Tanjung Malim: Sultan Idris Education University.
9. Fathin Noor Ain Ramli, Azhar Hj. Wahid. (2018). *Pendidikan sastera Melayu memperkukuhkan pembinaan karakter pelajar [Malay literary education to strengthen student character building]*. Tanjung Malim: Sultan Idris Education University.
10. Varatharasan.M. (2015). *Agal Vilakku [Small Earthen Lamb]*. Chennai: Paari Publisher.